## தேயிலை ஆராய்ச்சிச் சபை - 2015

தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சிச் சபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இனங்காமை அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 02**

மீளாய்வாண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது மீண்டெழும் செலவினத்திற்கான அரசின் மானியம் ரூபா 341,321,000 ஆன பணம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிச் செயற்பாடுகளின் கீழ் உருவான செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் ஐயக் கடன், ஊக்குவிப்புப் படிகள் மற்றும் காலக்கழிவு என்பவற்றிற்கான நிதிஏற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 7,214,280 காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

(i) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 49,983,824.03 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு பிழைகளை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதன் முகப்பெறுமதியிலிருந்து கருத்திற் கொள்ளக்கூடியளவில் வேறுபடும் போது சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிலையான சொத்துக்கள் தொடர்பில் சபை அவ்வாறான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

(iii) காணி மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக வகைப்படுத்த கூடிய சொத்துக்களாக இருப்பதுடன், அவற்றை வெவ்வேறாக வகைப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 202,749,711 தேறிய பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக அவ்வாறான வகைப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கட்டிடத்திற்கான

பெறுமானத்தேய்வு பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---------------------------------------------

ஏதேனும் குறிப்பான கணக்கு நடவடிக்கையொன்றிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்துகின்ற கணக்கீட்டு முறைமையால் மேவுகை செய்யப்படா விட்டால் மிகவும் பொருத்தமன முறைமையின் (Best Practice) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், அதனைக் குறிப்பிட்டு கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அது பின்பற்றப்பட வேண்டிய போதிலும், சபையினால் பின்வரும் சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,404,163 பெறுமதியான கற்பனைச் சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 174,913,032 கிரயத்திலான தேயிலை பயிர்ச்செய்கையை முதிர்ச்சியடைந்த, முதிர்ச்சியடையாத என வகைப்படுத்தப்பட்டு தனித்தனியாக இனங்காணல்.

(இ) சபைக்குரிய காணிகளின் பெறுமதியில் 5654 உயர் தாவரங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல்.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியணியினர் மற்றும் தொழிலாளர்களுக்கான சேமலாப நிதிய பங்களிப்பைக் கணக்கிடும் போது அடிப்படை சம்பளத்திற்கு வாழ்க்கை செலவினப் படிகள் சேர்க்கப்பட்டு அதன் மீது பங்களிப்பு கணக்கிடப்பட வேண்டிய போதிலும், 2006 சனவரி முதல் 2012 மே 30 வரை அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,986,901 தொகை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேயிலை தொழிற்சாலைகளில் ஆண்டில் விற்பனை செய்யப்படாதிருந்த பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை இறுதி இருப்புக்களை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக விற்பனை வருமானம் கணிப்பிடும் போது கடன் விற்பனையாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் தேயிலை விற்பனை வருமானம் மற்றும் கடன் மீதி ரூபா 2,884,584 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் தேயிலை உற்பத்தியில் 12,592 கிலோ கிராம் கழிவுத் தேயிலை விற்பனைக்காக கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 273,667 விற்பனை பெறுமதி கிடைக்க வேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சென் கூம்பஸ் தொழிற்சாலையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்ட தேயிலையின் பெறுமதி ரூபா 2,276,671 ஆக இருந்த போதிலும், பேரேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 2,381,511 ஆக இருந்ததுடன் ரூபா 109,840 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு ஒவ்வொரு ஆராய்ச்சி பிரிவுகளின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்த இரசாயனப் பொருள் இருப்பு மீதிகள் தொடர்பான விபரங்கள் பேணப்படாதிருந்ததன் காரணமாக அந்த இருப்பு மீதிகளின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | கல்வி அல்லது பயிற்சிகளுக்காக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் வெளிநாடு செல்லும் அரச உத்தியோகத்தரொருவர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் ஆகக்குறைந்த காலம் அரசாங்கத்தில் சேவை புரிவதற்கான கடப்பாட்டு உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் பிரயாணங்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104(2) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 5 வாகனங்கள் 6 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளானபோதும், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் இழப்பு தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாண இலக்கம் 177(1) | நாளாந்தம் சேகரிக்கப்படும் பணம் இயலுமானளவு துரிதமாக வங்கியில் இடப்பட வேண்டிய போதிலும், சென் கூம்பஸ் தொழிற்சாலை விற்பனை நிலையத்தின் தேயிலை விற்பனை வருமானம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாண இலக்கம் 316 (2) | பாதுகாப்பு காப்பகத்தில் வைப்புச் செய்யப்படுகின்ற அல்லது அவ்வாறு வைக்கப்பட்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தப் படும் பொருட்கள் தொடர்பான |

| | | |
|---|---|---|
| | | அறிக்கைகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகரொருவரால் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் பாதுகாப்பகத்தில் வைப்புச் செய்யப்படும் பணம் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாண இலக்கம் 317 மற்றும் 318 | பாதுகாப்பு பெட்டிகளின் சாவி மற்றும் இணைச் சாவி பொறுப்பு வாய்ந்த உத்தியோகரொருவர் பொறுப்பிலும் மேற்பார்வையின் கீழும் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையின் பாதுகாப்பகத்தின் சாவிகள் காசாளரின் பொறுப்பில் காணப்பட்டன. |
| (v) | நிதிப்பிரமாண இலக்கம் 341 | பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் தொடர்பாக பீ.ஏ.என் 20 பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாண இலக்கம் 397 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்காக தமது வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு உத்தியோகத்தரால் எப்போதும் ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையின் 1571 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் ரூபா 1,602,383 மேலதிகப் பற்று மீதி காணப்பட்டது. |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒரு தடவையில் ரூபா 100,000 இற்கு மேற்படாத முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சபையினால் ரூபா 101,880 முதல் ரூபா 1,100,000 வரை 13 சந்தர்ப்பங்களில் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | முறைப்படி நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன், சபைக்குரிய காணிகள் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 13,302,192 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 36,251,018 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 22,948,826 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவினங்களுக்காக அரசின் மானியம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 41,595,000 ஆல் கூடுதலாக கிடைத்திருந்தமை மற்றும் சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் தொழிற்சாலையின் தேறிய

இலாபம் ரூபா 2,885,648 ஆல் அதாவது 60 சதவீதத்தினால் அதிகரித்தமை என்பன பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011, முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை அதிகரித்த பெறுமதிக்குள்ளாகியிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் ரூபா 58.53 மில்லியன் ஆகவிருந்த பங்களிப்பு 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 53.14 மில்லியன் வரை சிறிதளவு குறைவடைந்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிலிருந்து அது படிப்படியாக அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 157.1 மில்லியனாக இருந்தது.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சபைக்குரிய சென் ஜோகிம் தோட்டத்தின் செயற்பாட்டு இலாப விகிதம் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், அது முறையே 19.03 சதவீதம் மற்றும் 7.16 சதவீதமாக இருந்தன. தோட்டங்களின் தேயிலை விளைச்சல் குறைவடைந்திருந்தமை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை விற்பனை வருமானம் 46 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தமை என்பன செயற்பாட்டு நட்டத்தின் அதிகரிப்பிற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் ஜோகிம் தோட்டத்திற்குரிய 05 ஹெக்டேயர் அளவிலான காணி 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினரால் பலவந்தமாக கைப்பற்றப்பட்டிருந்ததுடன், சபையினால் அக்காணியை கையேற்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஆ) முழுச் சம்பளத்துடன் வெளிநாட்டு கல்வி விடுமறை பெற்று வெளிநாடு சென்று மீண்டும் நாட்டிற்கு வருகை தராத 06 உத்தியோகத்தர்கள் சபையுடன் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் ரூபா 18,552,991 ஆன பிணைமுறி தொகையை அறவிடுவதற்காக நீதிமன்றங்களில் 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(இ) வெளித்தரப்பினரால் சபை மூன்றாம் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டு காணிப் பகுதியொன்றை கையேற்பதற்காக வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் ஊழியரொருவரால் முன்னர் வகித்த பதவியில் மீண்டும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 5 ஆவது உபபிரிவு மற்றும் 2003 இன் 30 ஆம் இலக்க திருத்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி சபையின் நோக்கங்கள் பின்வருமாறாக இருந்தன.

(i) தேயிலை செய்கையின் நோய்கள் மற்றும் பீடைகளிலிருந்து தவிர்த்தல் மற்றும் ஒழித்தல், தேயிலையின் தரத்தை அதிகரித்தல், உற்பத்தியைப் பல்வகைப்படுத்தல் போன்ற தேயிலை செய்கை மற்றும் உற்பத்திக்காக தாக்கமளிக்கும் அனைத்து

பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை வழிநடாத்துதல், ஒத்துழைத்து மற்றும் ஊக்குவித்தல்.

(ii) இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் எதிர்கால பொருளாதார போக்கு உட்பட அக் கைத்தொழில் துறையின் பொருளாதார நிரந்தரம் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அதற்காக உதவி புரிதலும், ஒத்துழைப்பு வழங்குதலும்.

(iii) தலவாக்கலையில் அமைந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பனவற்றைச் சபையின் விதிகளுக்கு இணங்க பராமரித்துச் செல்லலும் நிர்வகித்தலும்

(iv) இலங்கையிலும் வெளிநாட்டிலும் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல், பேணிச் செல்லுதல்.

(v) சுய சக்தி செயற்பாட்டை நிறைவேற்றும் போது வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இலங்கையின் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் ஒன்றினைந்து கற்கை வேலைத்திட்டங்கள் கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளை நடாத்துதல்.

(vi) தேயிலை ஆராய்ச்சிக்கான முதலீடுகளை மேம்படுத்துதல்.

(vii) தேயிலை தொழிற்சாலை தொடர்பான தரவுகளை சேகரித்தலும் அவற்றை விநியோகிப்பதற்கெனப்பொறுப்பேற்றலும், தேயிலை தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கான சாத்தியப்பாட்டை அறிந்து கொள்வதற்காக ஆராய்ச்சிகளை நடாத்துதலும்.

(viii) தேயிலை கைத்தொழிலுக்குரிய பொருத்தமான கொள்கை தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் வேறு முகவர் நிறுவனங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளலும்.

மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றும் போது சபை மேற்கொண்ட ஆராய்ச்சிகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(அ) சபையின் ஆராய்ச்சி செயற்திட்டங்களில் பெரும்பாலானவை நடைபெற்றவாறிருக்கும் நீண்டகால செயற்திட்டங்களாக இருந்ததுடன், திறைசேரியிடமிருந்து வருடாந்தம் கிடைத்த ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான மானியங்களிலிருந்து ரூபா 6,718,075 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 08 செயற்திட்டங்கள் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ளாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தாக தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆராய்ச்சி மதியுரைக் குழுவின் பரிந்துரையின் பேரில் குறைவான தாக்கத்துடன் கூடிய செயற்திட்டமொன்றாக கருதி ஆராய்ச்சி விஞ்ஞான பிரிவின் A 10.4 செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி பிரிவுகளின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனைத் தொடர்ந்து அதற்காக ரூபா 2,514,611 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ரூபா 3.93 மில்லியன் செலவு செய்து ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட 03 செயற்திட்டங்கள் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பின்வரும் ஆராய்ச்சிகளின் நிதிச் செயலாற்றல் நூற்றுக்கு ஐம்பது சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

| **செயற்திட்ட வகை** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **உள்ளவாறான கிரயம்** | **செலவிடப்பட்ட சதவீதம்** |
|---|---|---|---|
| ------------------- | ------------------- | ------------------- | ------------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| A1.3 | 2,223,774 | 277,109 | 12.5 |
| A30.5 | 2,807,140 | 499,097 | 17.8 |
| A50.4 | 2,848,029 | 1,115,957 | 39.2 |
| A50.6 | 1,292,045, | 509,271 | 39.4 |
| A15.1 | 3,835,045 | 1,833,290 | 48 |

(உ) ஏனைய விசேட செயற்திட்டத்தின் கீழ் தேயிலை பயிர்ச்செய்கையின் களுத்துறை நடவடிக்கைகளை இயந்திரமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த இயந்திர பயன்பாடு களத்துறையில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் செயற்திட்டத்தின் நோக்கங்கள் வினைத்திறனாக நிறைவேற்றப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(ஊ) சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகள் தொடர்பாக தொழில்நுட்பத்தை கையளிப்பதற்காக வெளி நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் எவ்வித வருமானமொன்றும் கிடைத்திருக்கவில்லை.

(எ) சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் செனட் கூம்பஸ் மற்றும் சென் ஜோகிம் ஆகிய இரண்டு தோட்டங்களில் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) செனட் கூம்பஸ் மற்றும் சென் ஜோகிம் ஆகிய இரு தோட்டங்களின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பச்சை தேயிலை கொழுந்து கொள்வனவு முறையே 528,000 கிலோகிராம் மற்றும் 1,915,347 கிலோகிராம்களாக இருந்ததுடன், உள்ளவாறான கொள்வனவு 437,318 கிலோகிராம் மற்றும் 955,206 கிலோ கிராம்களாக இருந்தமையால் விலகல் 17.17 மற்றும் 50.13 சதவீதமாக இருந்தன.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சென் ஜோகிம் தோட்டத்தில் ஹெக்டேயருக்கான உழைப்பு 923 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அது 619 கிலோ கிராம்களாக இருந்தன.

(iii) செனட் கூம்பஸ் தோட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட கழிவுத் தேயிலை 8 சதவீதமாக இருந்ததுடன் உள்ளவாறான அளவு 10.09 சதவீதமாக இருந்தது.

(iv) ஒவ்வொரு தொழிற்சாலையினதும் தேயிலை விற்பனை அளவு மற்றும் உற்பத்திக் கிரயம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | சென் ஜோகிம் தோட்டம் | | சென்கூம்பஸ் தோட்டம் (லெமிலியர் பகுதி உட்பட) | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| தேயிலை விற்பனை (கிலோ கிராம்) | 203,273 | 346,446 | 393,378 | 369,706 |
| உற்பத்திக் கிரயம் (ஒரு கிலோகிராமிற்கு ரூபா) | 436.15 | 457.61 | 481.10 | 500.04 |
| தேறிய விற்பனை சராசரி விலை (ஒரு கிலோகிராமிற்கு ரூபா) | 393.09 | 432.85 | 475.93 | 493.97 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சென்ட் ஜோகிம் தோட்டத்தின் விற்பனை அளவு 143,233 கிலோ கிராம்களால் குறைவடைந்திருந்ததுடன் ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திக் கிரயம் 5 சதவீதத்தால் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் அதற்கு ஒப்பாக தேறிய சராசரி விற்பனை விலை 9 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சென்ட் கூம்பஸ் தோட்டத்தின் விற்பனை அளவு 23,672 கிலோ கிராம்களால் அதிகரித்திருந்ததுடன் ஒரு கிலோ தேயிலையின் தேறிய சராசரி விற்பனை விலையை விட கூடிய பெறுமதியொன்று கிரயமாக செலவிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரசாயன பொருட்கள் மத்தியமடுத்தப்பட்ட களஞ்சியமொன்றில் சேகரித்து வைக்கப்பட்டுத் தேவையான அளவில் விநியோகிக்கும் முறையொன்று பின்பற்றப்படாமல் ஒவ்வொரு ஆராய்ச்சி பிரிவுகளிலும் களஞ்சியப்படுதப்பட்டிருந்தமையால் ஒரே வகையிலான இரசாயனப் பொருட்கள் வெவ்வேறு அளவுகளில் பல இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையும் சில இரசாயன பொருட்கள் காலாவதியாவதற்கும் தேவையற்ற இருப்புக் காணப்படுவதற்கும் வழி வகுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் தலைமை அலுவலகத்தின் நூலகப் புத்தகங்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன், கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் (1985-2016) வெளியில் எடுத்துச் சென்ற புத்தகங்களில் மீளக் கையளிக்காத எண்ணிக்கை 186 ஆக இருந்ததுடன் அவற்றை மீளக் கொண்டு வருவதற்கோ அல்லது பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் பயன்படுத்தப்படும் 5 வாகனங்களின் உரித்தை சபை கையேற்பதற்கு 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே வாழ்க்கை நிலையை உயர்த்தும் செயற்திட்டம் மற்றும் இயந்திரமயமாக்கல் செயற்திட்டம் போன்ற விசேட செயற்திட்டங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த முறையே ரூபா 5,699,717 மற்றும் ரூபா 3,300,989 தொகைகள் மீளாய்வாண்டின் போதும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் மூலதனச் செலவினத்தை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,971,000 தொகை செலவிடப்படாமல் எதிர்வரும் ஆண்டிற்காக கொண்டு செல்லப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் கூம்பஸ் தோட்டத்தின் மருத்துவ உதவியாளரிடம் காணப்பட்ட ரூபா 210,408 பெறுமதியான மருந்துப் பொருட்கள் இருப்பு 03 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் ஏ தொகுதியைச் சேர்ந்த உத்தியோகபூர்வ இல்லமொன்றும் சீ தொகுதியைச் சேர்ந்த 4 உத்தியோகபூர்வ இல்லங்களும் டீ தொகுதியைச் சேர்ந்த 19 உத்தியோகபூர்வ இல்லங்களும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) சென்ட் கூம்பஸ் தோட்டத்தினதும் சென்ட் ஜோகிம் தோட்டத்தினதும் இயந்திர இயலளவு முறையே நாளொன்றுக்கு பச்சை தேயிலைக் கொழுந்து 8,000 கிலோகிராம் மற்றும் 15,810 கிலோ கிராம்களாகும். எவ்வாறாயினும், அவ்வியந்திரங்களின் உள்ளவாறான சராசரி பயன்பாடு முறையே நாளொன்றுக்கு 5000 கிலோகிராம் (62 சதவீதம்) மற்றும் 6,253 கிலோ கிராம்களாக (17 சதவீதம்) இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சென்ட் கூம்பஸ் தொழிற்சாலையில் E.C.P 4 Drier இயந்திரம் 15 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(உ) தொழிற்சாலை ஆரம்பத்தின் போது பொருத்ததப்பட்டிருந்த 04 ரோல் இயந்திரங்களில் உற்பத்தி தொழிற்பாட்டிற்காக ஒரு தடவையில் 02 இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன் ஏனைய 02 இயந்திரங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) சென்ட் ஜோகிம் தோட்டத்திற்கு உரிய காணிகளில் நெல், தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த போதிலும் 8.74 ஹெக்டேயர் வயலிலிருந்து கிடைக்கும் வருமானத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களில் உள்ள மரங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிறுவனத்திடமுள்ள 5 கை உழவு இயந்திரங்கள் ஓடக் கூடிய நிலைமையில் காணப்பட்டவில்லையென இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றைக் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், ஓடக்கூடிய நிலைமையில் காணப்படும் மோட்டார் வண்டியொன்றைத் திருத்தியமைக்காமல் 05 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

### 4.5 தாமதமான செயற்திட்டங்கள்

சபையின் நீர் வழங்கல் முறைமையை மேம்படுத்தும் செயற்பாட்டிற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2015 சனவரி 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 2015 செப்தம்பர் 09 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதியளவிலும் உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 443 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியனர் 241 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் 202 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 91 பதவிகள் மிகைகளாக இருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறைவேற்று மட்டத்தில் அல்லாத பதவிகளில் 107 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் உள்ளடங்கிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினதும் விரிவாக்கல் உத்தியோகத்தர்களினதும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் முறையே 50 மற்றும் 24 ஆக இருந்ததுடன், அதில் 43 மற்றும் 14 சதவீதம் என 77 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சபையின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகள் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படுவதுடன், பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் தகைமைகளைக் கொண்டிராத காரணத்தினால் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

(இ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு அதுவரை சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த 112 ஊழியர்களுக்கு (ஆரம்ப தரத்தில் 105 ஊழியர்களுக்கும் 07 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும்) 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீ எல் - 1 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை 65 ஆக இருந்த போதிலும், இந்த ஆட்சேர்ப்புக் காரணமாக அப்பதவியணியில் 91 பேர் மிகையாக இருந்தனர்.

## 4.7 குறைபாடுகளாகத் தோற்றுபவை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து தேயிலை உற்பத்திகளும் புரோக்கர் கம்பனி ஊடாக தேயிலை ஏல விற்பனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது புரோக்கர் கம்பனியின் பெயரில் வழங்கப்பட்ட 02 பட்டியலுக்கு ஏற்ப 224 கிலோ கிராம் தேயிலை அதற்கு முரணாக தொழிற்சாலை முகாமைத்துவத்தின் மூலம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநிறுவனமொன்றுக்கு முற்பணத்தை விடுவிக்க முன்பு உரிய செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு சாத்தியம் காணப்படுகின்றதா என உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 2011 ஆம் ஆண்டின் போது மத்துகம பிராந்திய அலுவலகத்திற்கு நீர்த்தாங்கி ஒன்றைத் கொள்வனவு செய்வதற்காக ரூபா 110,124 தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனம் மூடப்பட்டிருந்ததாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியை மீளப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

# 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 01 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் வரைவு ஆண்டறிக்கை 2016 ஒக்தோபர் 30 ஆம் திகதியளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் பிரதான செயற்பாடான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாகவும் நிதி அல்லது பௌதீக செயலாற்றல் தொடர்பாகவும் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருமானமும் செலவினமும் உள்ளபடியான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடப்படுகையில் 35 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரிப்பதற்காக மாதாந்த ஊழிய கொடுப்பனவினை மீளளிப்பதற்காக 2007 மே 24 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இத்தொழிலாளர் படிகள் நாளாந்த தொழிலாளர் சம்பளத்திற்கு உற்பத்தி உபகாரப் படிகள், மேலதிகநேர மற்றும் வருகைக் கொடுப்பனவு வேலை என்பன சேர்க்கப்பட்டு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,540,470 தொகை சபையால் மீளளிக்கப்பட்டிருந்தது. இதற்காக வரிசை

அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், 2014 நவம்பர் 19 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் அந்தந்த விடயங்களுக்குரிய சுற்றறிக்கைகள் மற்றும் சமமான ஏனைய நிறுவனங்களை விஞ்சி பதவியணியினருக்கு வழங்கப்படும் விடுமுறைகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற நீர், மின்சாரம் என்பவற்றிற்காக கட்டணங்களை அறவிடாமை போன்ற வரப்பிரசாதங்கள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேயிலையைத் தயாரிப்பதற்காக சபையினால் 1982 ஆம் ஆண்டின் போது ரூபா 4,142,173 செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் செயற்திட்டத்திற்கு பொருந்தாததால் விளைவற்றுக் காணப்பட்டது. இப்பெறுமதியைத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதுவரை கணக்குகளிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன், நடைமுறைவேலையாக தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) தொழிற்சாலை செயற்பாட்டுக் கட்டுப்பாடு | சென ஜோகிம் தொழிற்சாலையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை மற்றும் தொடர்ச்சியான நட்டம். |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டமை |
| (ஈ) கணக்கீடு | உரிய திகதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படாமை. |